**ஹொரண பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹொரண பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெறப்பட்டுள்ள கடனிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 3,213,411 தொகையான கடன் தவணைப்பணத்தில் இருந்து கடன் தவணைப்பணம் மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மொத்தப் பெறுமதி காசேட்டில் செலவு வைக்கப்பட்டு மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கடன்பட்டோரிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 194,906 தொகையிலான காசோலைகள் மதிப்பிழந்து அத் தொகை காசேட்டில் செலவு வைக்கப்பட்டு மதிப்பிழந்த காசோலைகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. மீள அப் பணம் கடன்பட்டோரிடம் இருந்து பெறப்பட்டிருந்ததுடன் மதிப்பிழந்த காசோலைகள் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது அத் தொகை வட்டிக் கொடுப்பனவு இலாப மற்றும் ஊக்குவிப்புப் பணத்தின் கீழ் மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது வீதி பழுதடைந்த கட்டணமாக அறவிடப்பட்ட ரூபா 5,401,267 தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் படி, நிலுவை வருமான அறிக்கையின் படி வீத வரி, ஏக்கர் வரி, வியாபார அனுமதிப்பத்திரம், விநோத வரி மற்றும் கடை வாடகையாக

ரூபா 11,241,916 பட்டியல் இடப்பட்டிருந்த போதிலும் ரூபா 9,615,363 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக பெறவேண்டிய வருமானம் ரூபா 1,626,553 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மூலதனச் சொத்துக்கள் பழுதுபார்த்தல் கணக்கு சமப்படுத்தப்பட்டு பெற வேண்டிய மீதி ரூபா 25,217,992 தொகையான போதிலும், பரீட்சை மீதிக்கு ரூபா 25,262,960 ஆகக் கொள்ளப்பட்டதன் காரணமாக ரூபா 44,968 தொகையால் செலவினம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டணமாக நிலுவையாகக் காணப்பட்ட ஏனைய வருமானக் கணக்கிற்கு ரூபா 37,808,154 தொகை வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் முத்திரைக் கட்டண வருமானக் கணக்கிற்கு ரூபா 16,871,062 தொகை செலவில் பதிவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 20,937,092 தொகையால் முத்திரைக் கட்டண வருமானம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) ரூபா 539,363 தொகையான நிலையான வைப்புக்களின் வட்டி நேரடியாக வைப்பு வருமானமாக செலவு வைக்கப்பட்டு ரூபா 344,660 தொகையான வங்கிக் கட்டணம் செலவினமாக வரவு வைக்கப்பட்டு வருமானத்தில் இருந்து செலவினம் ஈடுசெய்யப்பட்டு ரூபா 194,703 தொகை நானாவித வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் மக்கள் வங்கி நிலையான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 21,198,992 தொகையான போதிலும் அன்றைய தின வங்கி உறுதிப்படுத்தலின் படியான மீதி ரூபா 23,315,254 தொகையானமையால் ரூபா 2,116,262 தொகையால் வட்டி வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) நிலையான சொத்துக் கணக்கின் மீதியின் கூட்டுத்தொகையும் மூலதனச் செலவினத்திற்காக வருமானத்தில் பங்களிப்பான கணக்கு மீதி உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அக் கணக்கிற்கு இடையே ரூபா 9,366,773 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 129,277,457 கூட்டுத்தொகையான 8 கணக்கு மீதிகளும், கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 3,994,697 கூட்டுத்தொகையான 2 கணக்கு மீதிகளும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 16,006,325 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 8,558,869 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரி | 8,282 | 9,602 | 13,982 |
| (ii) | ஏக்கர் வரி | 31 | 5 | 486 |
| (iii) | கைத்தொழில் வரி | 625 | 625 | - |
| (iv) | வியாபார வரி | 2,542 | 2,542 | - |
| (v) | வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் | 943 | 926 | 20 |
| (vi) | குத்தகை வாடகை | 425 | 425 | 181 |
| (vii) | வினோத வரி | 533 | 483 | 51 |
| (viii) | குடை வாடகை | 1,452 | 3,012 | 482 |

#### 2.2.2 வீதவரி

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 13,982,677 தொகையான நிலுவையான வீதவரி மீதியில் 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ரூபா 4,289,754 தொகையான நிலுவை மீதி காணப்பட்ட போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போருவதன்ட உப அலுவலகத்திற்குரித்தான முதலீட்டு வலயமாகக் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து 2008 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 8,411,805 தொகையான வீத வரி நிலுவை மீதி அறவிடப்படாதிருந்ததுடன் அங்கீகாரம் இன்றி 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி அத் தொகை நிலுவை வருமான அறிக்கையில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 ஏக்கர் வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 486,141 தொகையான நிலுவையான ஏக்கர் வரி மீதியில் 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ரூபா 117,179 தொகையான நிலுவை மீதி காணப்பட்ட போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 8,000,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 37,808,154 |

(ஆ) ஹொரண, களுத்துறை, பாணந்துறை, தெல்கந்த, ஹோமகம போன்ற காணிப் பதிவுக் காரியாலயங்களில் இருந்து 2011 பெப்ரவரி முதல் பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்திற்கு உரித்தான பட்டோலை மாகாண வருமான ஆணையாளர் நாயகத்திடம் இருந்து தருவிக்கப்படுவதற்கு 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நீதிமன்ற மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் தீர்மானிக்கப்படுகையில் உள்ளபடியாகக் கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பாக கருத்திற்கொள்ளாது பட்டியல் இடப்பட்டிருந்ததன் காரணமாக பெறவேண்டிய முத்திரை மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

### 3.1.1 வீதிச் சேத வைப்பு

அரசாங்கம் அல்லது வேறு நிறுவகங்களால் வீதி சேதமடைவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது சபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 275,000 தொகையும் 2011 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 990,990 தொகையுமாக ரூபா 1,265,990 கூட்டுத்தொகையான வைப்புத் தொகை உரிய வீதி திருத்தப்படாது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.1.2 ஊழியர் பிணை வைப்பு

(அ) சபையில் பிணை வைக்க வேண்டிய ஊழியர்களிடம் இருந்து ரூபா 21,600 தொகை பிணை வைப்பாக அறவிடப்பட்டிருந்த போதிலும் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அத் தொகை வைப்பில் இடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 7 ஊழியர்களிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 14,500 தொகையான பிணை வைப்பிற்காக மாத்திரம் கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இதில் இரு

ஊழியர்கள் ஓய்வு பெற்று இருவர் இடம் மாற்றம் பெற்றிருந்த போதிலும் இதற்கு உரித்தான பிணை வைப்பு விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 வாகனக் கட்டுப்பாடும் பராமரிப்பும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையில் 25 வாகனங்கள் சபையில் காணப்பட்ட போதிலும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 1647(அ) பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு வாகனத்தின் உபகரணம் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 (ஆ) மற்றும் (இ) மற்றும் 1646 இன் படி, சபையின் எந்த வாகனத்திற்கும் உரித்தான மாதாந்தப் பொழிப்பு தயாரிக்கப்பட்டிராததுடன் ஓட்ட அட்டவணைகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் இல 41/ 90 இன் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சில வருடங்களாக 07 வாகனங்களின் மைலோ மீற்றர் செயலிழந்து காணப்பட்ட போதிலும் இவை திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கை உழவு இயந்திரமும் இழுவை இயந்திரமும் 2008 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்தமையால் கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.4 மோட்டர் கிரேடர் மற்றும் JCB இயந்திரம்

(அ) மேற்குறித்த இயந்திரம் வீதியைச் செப்பனிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகைய எவ்வித செயற்பாட்டிற்காகவும் எதிர்கால வேலைத் திட்டம் ஒன்றோ அல்லது செயற்பாட்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு இருக்கவில்லை. தலைவரால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மோட்டர் கிரேடர் திருத்தப்படுவதற்காக ரூபா 535,482 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் ஜேசீபீ இயந்திர எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினத்திற்காக ரூபா 2,001,990 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.1.5 முற்பணக் கொடுப்பனவு**

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(ஆ) இன் பிரகாரம், நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ரூபா 20,000 தொகைக்கு மேலாக முற்பணம் பெற முடியாத போதிலும் அவ் எல்லைக்கு மேலதிகமாக ரூபா 857,047 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**3.1.6 பதவியணியினர் கடன்**

(i) ஊழியர் கடன் மீதியில் சேவையை விட்டுச் சென்ற 23 ஊழியர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 186,111 தொகையாகக் காணப்பட்டது. 2015 மே 30 ஆம் திகதி வரையில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 179,611 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி, இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், அமைய மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் 19 பேரிடம் இருந்து ரூபா 35,646 தொகை கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. இத் தொகை உரிய தரப்பினருக்கு மீள வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைய ஊழியர்கள் 7 பேரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 15,000 தொகையான பணம் உரிய பிணையாளிகளிடம் இருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் படி 24 செலவின விடயங்களிற்காக ரூபா 4,514,500 தொகையான பணம் ஒதுக்கப்பட்டிருந்தள போதிலும் ஆண்டின் இறுதியில் இதில் எந்தவித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. இதன் படி, பாதீட்டுப் பதிவேடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

(ஆ) 10 செலவின விடயங்களுக்காக ரூபா 18,262,800 தொகையான ஏற்பாடு உரிய பணி மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் படி, ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எய்தப்படுவதற்கு முற்பட்டிராமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மாகாண நிர்ணய செயற்திட்டங்களுக்காகச் செலுத்தப்பட வேண்டியிருந்த செலவினங்களாக ரூபா 99,506 தொகை கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தான மகநெகும செயற்திட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய செலவினமாக ரூபா 308,641 தொகைக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் வருமானச் செலவினக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வள முகாமைத்துவம்